# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## நான்காம் வருட முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு

## 2015 / 2016 (ஜூன்/ ஜூலை - 2018)

**YS 4143 : International Relations**

**YS 4143 : சர்வதேச தொடர்புகள்**

ம் : 03 மணித்தியாலங்கள்

வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது. முதலாம் பகுதியிலிருந்து இரண்டு ாக்களையும் இரண்டாம் பகுதியிலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக து வினாக்களுக்கு மட்டும் விடையெழுதுக.

த்துக்கள் தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.

---

### பகுதி - I

1. அ) 'சர்வதேச தொடர்புகள்' என்றால் என்ன என்பதை விளக்கி அதன் முக்கியத்துவத்தினைச் சுருக்கமாக எடுத்துக் கூறுக. (10 புள்ளிகள்)

   ஆ) நாடுகளுக்கிடையிலான உறவுகளை வளர்த்துக் கொள்வதற்கு உலக நாடுகள் முயற்சிப்பதற்கான காரணங்களை விபரிக்குக. (10 புள்ளிகள்)

2. "அமெரிக்கா, சோவியத் ரஷ்யா போன்ற நாடுகளின் இரு வேறுபட்ட கொள்கையில் வளர்த்தெடுக்கப்பட்ட தொடர்புகள் உலக நாடுகளை இரு கூறாக்கி பனிப்போராக (Cold War) உருவாகக் காரணமாயிற்று." இக்கூற்றின் அடிப்படையில் மேல்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

   அ) நேட்டோ அமைப்பும் அமெரிக்காவும் (10 புள்ளிகள்)

   ஆ) வார்சோ அணியும் சோவியத் ரஷ்யாவும் (10 புள்ளிகள்)

3. "உலக நாடுகளின் சர்வதேச ஒத்துழைப்புடனும் உயரிய நல்நோக்கங்களுடனும் ஐக்கிய நாடுகள் தாபனத்தினால் உருவாக்கப்பட்ட பிரகடனமே சர்வதேச மனித உரிமைச் சாசனமாகும்." இக்கூற்றினை ஆதாரமாகக் கொண்டு மேல்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

   அ) சர்வதேச மனித உரிமைச் சாசனத்தில் இடம்பெற்றுள்ள முக்கிய அம்சங்களை சுருக்கமாகக் குறிப்பிடுக. (10 புள்ளிகள்)

   ஆ) சர்வதேச மனித உரிமைகள் சபையினால் (Human Rights Council) முன்னெடுக்கப்பட்டு வரும் பணிகளை விளக்குக. (10 புள்ளிகள்)

## பகுதி – II

4. "19ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகளிடையே வளர்த்தெடுக்கப்பட்ட சர்வதேச தொடர்புகள் காலனித்துவ ஆதிபத்தியத்தினையே அடிப்படையாகக் கொண்டவையாகும்". இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை சமகால அரசியல், பொருளாதார, சமூகக் காரணிகளினூடாக ஆராய்க.
(20 புள்ளிகள்)

5. 'யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையின் சர்வதேச தொடர்புகளில் ஐக்கிய நாடுகள் தாபனத்தின் வகிபங்கு' என்ற தலைப்பில் ஒரு விமர்சனக் கட்டுரை எழுதுக.
(20 புள்ளிகள்)

6. 'அமெரிக்காவின் இராஜதந்திரக் கொள்கையும் அணுவாயுத உற்பத்தியும்' என்ற அணுகுமுறையை நுணுகி ஆராய்க.
(20 புள்ளிகள்)

7. "தெற்காசிய நாடுகளிடையே நல்லுறவு, பிராந்திய ஒத்துழைப்பு ஆகியவற்றை ஏற்படுத்தும் முகமாக உருவாக்கப்பட்டதே சார்க் (SAARC) அமைப்பாகும்." இதன் செயற்பாடுகளை மதிப்பீடு செய்க.
(20 புள்ளிகள்)